செய்தி வெளியீடு எண்.162 நாள்.4.3.2008

## சென்னையில் பொது விநியோகத் திட்டம் தொடர்பான குறைகளை தெரிவிக்க துணை ஆணையர்கள் அலுவலகங்களில் இரண்டு கட்டுப்பாட்டு அறை இயங்கும்

## மாண்புமிகு உணவு அமைச்சர் எ.வ. வேலு அறிவிப்பு

சென்னை மாநகரில் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் தொடர்பாக இன்று 04.03.2008 காலை 11.00 மணியளவில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் 4–வது தளத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள்.

கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், பொது விநியோகத் திட்டம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுகிறது என்றும், அனைத்து பொருட்களும் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு பொது மக்கள் எவ்வித சிரமமும் இல்லாமல் பொருட்கள் வாங்க எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இருப்பினும் சென்னை மாநகரில் உள்ள, வ.உ.சிதம்பரனார், ராயபுரம், பெரம்பூர், அண்ணாநகர், அம்பத்தூர், வில்லிவாக்கம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய மண்டலங்களில் உள்ளவர்களுக்கு ஏதேனும் குறைகள் ஏற்பட்டால், துணை ஆணையர் (வடக்கு) அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை எண்.28551028லும், மைலாப்பூர், பரங்கிமலை, சேப்பாக்கம், ஆயிரம்விளக்கு, சைதாப்பேட்டை, தி.நகர் மற்றும் தாம்பரம் ஆகிய மண்டலங்களில் உள்ளவர்கள் துணை ஆணையர் (தெற்கு) அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை எண்.28551026லும் புகார்கள் செய்யலாம். இதில், நியாயவிலைக் கடைகள் உரிய நேரத்தில் திறக்கப்படவில்லை என்றாலும், நிர்ணயிக்கப்பட்ட அளவில் பொருட்கள் வழங்கப்படாமல் குறைவாக வழங்கப்பட்டாலும், இருப்பு இல்லை என்று தெரிவித்தாலும், அரசு தேவையான அளவு பொருட்கள் வழங்கப்படவில்லை, குறைவாகத்தான் வழங்கப்பட்டுள்ளது இதனால், குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய அளவு பொருட்கள் வழங்கமுடியவில்லை என்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் தெரிவித்தாலும், குடும்ப அட்டை வழங்க காலதாமதம் போன்ற குறைபாடுகளுக்கு பொது மக்கள் அலுவலக நேரத்தில் இந்த கட்டுபாட்டு அறைகளை (**Control Room**) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு புகார்கள்

செய்யலாம் என்றும், அவர்களுடைய புகார்கள் குறித்து உடனடியாக விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதுடன், புகார் மனுதாரர்களுக்கும் உரிய பதில் அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

குடும்ப அட்டை வழங்கும் பணியை பொது மக்களுக்கு எவ்வித இடர்பாடுகளின்றி குறிப்பிட்ட கால அளவிற்குள் வழங்கப்பட அரசு எல்லாவித நடவடிக்கைளையும் மேற்கொண்டுள்ளது என்றும், இனிமேல் பொது மக்கள் குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தால் உரிய விசாரணை செய்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பொது மக்களிடம் கண்ணியமாகவும், அன்பாகவும் பேச வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். கூட்ட நேரங்களில் மனுக்களை பெறும் அலுவலர்கள் விடுமுறையில் சென்றால் உதவி ஆணையர்கள் உடனடியாக மாற்று ஏற்பாடு செய்து மனுக்களை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விசாரணை செய்யும் விசாரணை அலுவலர் அன்றைய தினமே உதவி ஆணையர்களிடம் அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள். மெத்தனமாகவும், அலட்சிய மனப்பான்மையுடன் பணிபுரியும் அலுவலர்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்கள். நியாயவிலைக் கடைகளை துணை ஆணையர்கள் ஆய்வு செய்து ஆய்வறிக்கையை ஒவ்வொரு மாதமும் அனுப்ப வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, துணை ஆணையாளர்கள் வடக்கு மற்றும் தெற்கு மற்றும் உதவி ஆணையர்கள் ஆகியோர் பங்குபெற்றனர்.

***********

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.